<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம். இலால்குடி.</u>

<u>அ.வ.எண்.349/2018</u>
<u>15.07.2026</u>

2026 ம் ஆண்டு ஜுலை 15 ஆம் தேதி என்பவரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டு 54 வது விதியின் 9 வது ஏற்பாட்டின்படி) திரு.V.சரவணன், உதவியாளர் என்பவரது ஆணையீட்டால் உறுதி கூறப்படுகின்றது. பிரமாணம் செய்யப்படுகிறது.

==========================================================

| | |
|---|---|
| பெயர் = பிச்சைமணி | தகப்பனார் பெயர்= பெருமாள் |
| கிராமம் = | தாலுக்கா = |
| தொழில் = | வயது = |

==========================================================

**<u>DW4 முதல் விசாரணை</u>**

1. நான் நீதிமன்றத்திலிருந்து கிடைக்கப் பெற்ற அழைப்பாணையின் பெயரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். தாவா சொத்து 3 தாக்காக உள்ளது. மேற்படி 3 தாக்குகள் 1 ஏக்கர் 16 சென்டாகவும், 6 சென்டாகவும், 69 சென்டாகவும் உள்ளது. தாவா சொத்தின் மொத்த பரப்பளவு சுமார் 2 ஏக்கர் இருக்கும் என்றால் சரிதான். தாவா சொத்தின் உரிமையாளர் தற்போது பரமேஸ்வரி, ஆதியில் பெரியசாமி என்பவர் இருந்து வந்தார். மேற்படி பெரியசாமிக்கு 3 வாரிசுகள் ஆவார்கள். பரமேஸ்வரி, பழனி மற்றும் முத்துவேல் ஆகியோர்கள் வாரிசுகள் ஆவார்கள்.
2. தாவா சொத்திற்கும், எனக்கும் என்ன தொடர்பு என்றால் நான் தாவா சொத்தில் வேலை செய்வேன். 25 வருடங்களுக்கு முன்பு பெரியசாமி இறந்துவிட்டார், பழனியும் இறந்துவிட்டார். பெரியசாமியின் மகன் முத்துவேல் மற்றும் பரமேஸ்வரியின் கணவர் முத்துசாமி ஆகியோர்கள் தாவா சொத்தில் 16

வருடங்களாக சாகுபடி செய்துவந்தார்கள். மேற்படி பழனி 2014 ல் இறந்துவிட்டார். தாவா சொத்தில் நாங்கள் தான் சாகுபடி செய்து பரமேஸ்வரிக்கு கொடுத்து வருகிறோம். தற்போது நடப்பாண்டில் நானே தாவா சொத்தில் சாகுபடி செய்ய உள்ளேன்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

1. நீதிமன்றத்திலிருந்து எனக்கு அழைப்பாணை வந்தது என்றாலும், இன்றைய தேதி குறிப்பிட்டு வரவில்லை என்றாலும் சரிதான். நான் எந்த முகவரியின் வசித்து வருகிறேன் என்பதை காண்பிக்கக்கூடிய ஆவணங்கள் எதையும் நான் தாக்கல் செய்யவில்லை. வழக்கு சொத்தில் பரமேஸ்வரி எந்த காலத்திலும் விவசாயம் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் தாவா சொத்தில் விவசாயம் செய்யவில்லை என்றால் சரியல்ல. 40 வருடங்களாக நான் தான் விவசயாம் செய்துவருகிறேன்.
2. நான் சொல்வது போல் தாவா சொத்தில் நான் சாகுபடி செய்து பரமேஸ்வரிக்கு கொடுத்து வரவில்லை என்றால் சரியல்ல. பரமேஸ்வரி பெயரில் தாவா சொத்திற்கு உள்ள ஆவணத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. பரமேஸ்வரி பெயரில் எந்த ஆவணமும் இல்லை என்றாலும், நான் வழக்கிற்காக பரமேஸ்வரி பெயரில் ஆவணம் உள்ளதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.
3. தாவா சொத்திற்குரிய பட்டா மற்றும் பத்திரம் யார் பெயரில் உள்ளது என்றால் பரமேஸ்வரி பெயரில் உள்ளது. பரமேஸ்வரி

பெயரில் தான் வரி செலுத்தப்பட்டு வருகிறது, நான் தான் இரண்டு முறை வரி செலுத்தி அவர் வசம் கொடுத்து வந்தேன். மேற்படி பரமேஸ்வரி இரண்டு முறை தனியாக வரி செலுத்தி கொண்டார். தாவா சொத்தை வாதி சந்திரசேகர் கிரையம் பெற்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் பரமேஸ்வரி சொன்னார். வழக்கு நடப்பதாகவும் சொன்னார். தாவா சொத்து ஆதியில் பெரியசாமி வேறு நபரிடமிருந்து கிரையம் வாங்கிய சொத்தாகும். மேற்படி பெரியசாமி தனது மகன்கள் பெயரில் தான் தாவா சொத்தை கிரையம் பெற்றார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

4. எனக்கு வழக்கு பற்றிய விவரங்கள் எதுவும் தெரியாது என்றாலும், பரமேஸ்வரி கேட்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தின் அளவுகள் எதன் அடிப்படையில் எனக்கு தெரியும் என்றால் பெரியசாமி அவரது மகன் பழனி சொல்லி நான் தெரிந்து கொண்டேன். ஆவணத்தை பார்க்கவில்லை. தாவா சொத்து 3 தாக்காக வெவ்வேறு சர்வே எண்களில் உள்ளது என்றால் சரிதான். வழக்கு பற்றிய விவரங்கள் எனக்கு முழுமையாக தெரியாது.

**Signed,**
பிச்சைமணி

சாட்சி சொல்ல சொல்ல திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சி சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு

கையெழுத்திட்டார்

PRAGATHEESHWARAN SUBRAMANIAN

Digitally signed by PRAGATHEESHWARAN SUBRAMANIAN

**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**

**இலால்குடி.**